Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 20 (04 07 1991) வியாழக்கிழமை ஓசை: 130

## யாழ்.சர்வோதயத்தில் சீனி கையிருப்பு குறைவு

(நல்லூர்)

யாழ்ப்பாணம் சர்வோதய நிலையத்தில் சீனியின் கையிருப்பு குறைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சட்டநாதர் கோயில் வீதியில் அமைந்திருக்கும் சர்வோதயத்தின் களஞ்சியத்திலிருந்து சுமார் 1200 கிலோ சீனி, அதாவது 24 மூடை சீனி கையாடப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கிளஸ்ரோன் வெளியேற்றத்தின் எதிரொலி

# சிறிலங்காவிற்கான உதவியை பிரிட்டன் நிறுத்தியது

## இராணுவ தளபாட விற்பனையிலும் கட்டுப்பாடு

(லண்டன்)

சிறிலங்காவிற்கான பிரிட்டன் தூதுவர் கிளஸ்ரோன் வெளியேற்றப்பட்டமையானது ஒருதலைப்பட்சமானதும் அர்த்தமற்ற நடவடிக்கையுமாகும் என பிரிட்டன் கண்டித்துள்ளது. மேலும் சிறிலங்காவிற்கான பொருளாதார உதவிகளை இடைநிறுத்தியுள்ளதோடு, இராணுவ தளபாட விற்பனையில் புதிய கட்டுப்பாடுகளையும், நல்லெண்ண தூதுக் குழுக்களின் விஜயங்களையும் நிறுத்தி வைத்துள்ளதாக பிரிட்டன் வெளியுறவுச் செயலகம் நேற்று அறிவித்தது.

நேற்றுக்காலை பிரிட்டனின் உள்ள வெளிவிவகார அமைச்சுக்கு லண்டனிலுள்ள சிறிலங்கா தூதுவர் ஜெனரல் சேப்பால ஆட்டிகல அழைக்கப்பட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்துள்ள இம்முடிவுகள் பற்றித் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு பிரிட்டன் வெளிவிவகார உதவி அமைச்சர் தெரிவித்தார்.

இத்தீர்மானங்களின்படி வருடா வருடம் பிரிட்டன் சிறிலங்காவிற்கு வழங்கிவந்த 13 மில். பவுண் உதவி நிறுத்தப்படும். அதேவேளை கடந்த ஒக்டோபரிலேயே சிறிலங்காவிற்கான 3 மில். பவுண் கடன் நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இடைநிறுத்தப்படும் இக்கடன் சிறிலங்காவிற்கான பிரிட்டனின் புதிய தூதுவர் பதவியேற்ற பின்னர் சிறிலங்காவில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் பற்றிய அவரது கருத்துக்களைப் பொறுத்தே உதவி பற்றி மீள் பரிசீலனை செய்யப்படும்.

மேலும் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து பெறப்படும் இராணுவத் தளபாட வர்த்தகத்தில் புதிய கட்டுப்பாடுகளும் விதிக்கப்படும். மேலும் பிரிட்டனிலிருந்து செல்லும் கடற்படையின் நல்லுறவு விஜயங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கறுப்புத் துணிகளுக்குத் தடை

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் இருந்து கறுப்புநிறம் கொண்ட துணிகள் கொண்டு வருவது சிறிலங்கா இராணுவத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன்னர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் வெளியேறுவது மத்திய அரசு விவகாரம் - ஜெயலலிதா

(சென்னை)

தமிழ்நாட்டில் அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள விடுத்த அறிக்கை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது மத்திய அரசு முடிவு செய்ய வேண்டிய பிரச்சினையாகும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்றுத் தெரிவித்தார்.

முகாம்களுக்கு வெளியில் வசிக்கும் தமிழர்கள் வரும் சனிக்கிழமைக்குள் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் உத்தரவு.



நேற்று முன்தினம் வரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பில் இராணுவத் தலைமையகக் கட்டடத்தில் சமீபமாக நடந்த குண்டு வெடிப்பினால் இடைநிறுத்தப்பட்டிருந்த இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் தொடக்கப்பட்டிருப்பதாகச் செய்தி ஒன்று சுட்டிக்காட்டுகிறது.

## திருமலையில் இரு தமிழர் இராணுவ. சுட்டு கொலை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் பகுதியில் ரோந்து வந்து கொண்டிருந்த இராணுவம் இரு தமிழரை சுட்டுக் கொன்றுள்ளது.

## நூறு நாள் பேச்சிற்குள் சமாதானத் திட்ட உருவாக்கம்?

நூறு நாட்களுக்குள் வடக்கு-கிழக்கு விவகாரம் பற்றி புலிகளுடன் பேசி முடிவெடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் சமாதான ஒப்பந்தம் ஒன்றும் உருவாக வேண்டும் என்பனவற்றை உள்ளடக்கிய திட்டம் ஒன்று சிறிலங்கா அரசின் பரிசீலனையில் உள்ளதாக சென்னையில் இருந்து வெளிவரும் புரன்ரலைன் ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அச் சஞ்சிகையில் இச் சமாதான திட்டம் யாரால் தயாரிக்கப்பட்டது என்ற தகவல் கொடுக்கப்படாவிட்டாலும் அமைச்சர் தொண்டமான் தயாரித்ததாகத் தெரிய வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தின்படி பேச்சுவார்த்தை ஆரம்பித்து நூறு நாட்களுக்குள் அதிகாரப் பரவலாக்கல் பற்றி இரு தரப்பினரும் முடிவொன்றிற்கு வந்து ஒப்பந்தம் கைச்சாத்தாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் தீவினுள் இராணுவம்

# புலிகள் மோதல்; இரு படை பலி

(மன்னார்)

மன்னார் தீவினுள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மோதலில் நான்கு புலிகள் வீரமரணமடைந்தனர். இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் மன்னார்த் தீவிலுள்ள ஓலைத்தொடுவாய் என்னும் இடத்தில் நடந்துள்ளது. ஓலைத்தொடுவாய்ப் பகுதியைச் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபடும் போது புலிகளுடன் எதிர்பாராத விதமாக இந்நேரடி மோதல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் இரண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்டன் பரிது உட்பட நான்கு புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

மன்னார்த் தீவில் ஓலைத்தொடுவாய் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் கப்டன் பரிது (அலெஸ். வி. அல்பிரட், ஓலைத்தொடுவாய், மன்னார்) இரண்டாம் லெப், ரவி (க. புவிராஜலிங்கம், நாவற்காடு, மட்டக்களப்பு) பாமேஸ் (க. உதயகுமார் நல்லூர் பூநகரி) வதனன் (தா. ஜெஸ்பீரிஸ், வங்காலை மன்னார்) ஆகியோர் வீரமரணத்தை தழுவியுள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மாவீரர் தினத்தையொட்டி கலை கலாசார போட்டி

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டிற்கான மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் கலை கலாசாரப் போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

கட்டுரை, நாடகம், சிறுகதை, கவிதை, சுவரொட்டி ஆகிய பிரிவுகளில் நடைபெற இருக்கும் போட்டிகளு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட

## ஊழியர் சம்பள நிலுவை வவுனியாவில் விநியோகம்

(வவுனியா)

வவுனியா கல்வித் திணைக்களம் 1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட ஊழியர்களுக்கு சம்பள நிலுவையை வழங்கியுள்ளது. பொது நிர்வாக திணைக்களத்தின் சுற்று நிருபத்துக்கிணங்க வவுனியா கல்வித்திணைக்களத்தின் கடமையாற்றும் ஊழியர்களில் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டவர்களுக்குரிய சம்பள நிலுவை மற்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பரீட்சைப் புள்ளிகளுக்கு கேரளாவில் புதியமுறை

கேரள மாநிலத்தில் கல்விப் பட்டப்படிப்பு நெறிக்குப் (பீ.ஈ டி)படிப் போர் எழுதப் படிக்கத் தெரியாத ஐந்து பேருக்குக் கல்வி புகட்டினால் எழுதும் பரீட்சையில் 2 சதவிகிதம் மதிப்பெண் மேலதிகமாக வழங்கப்படும். பி ஈ டி பட்டதாரி மாணவர்களும் இந்தச் சலுகையைப்பெறமுயன்று கொண்டிருக்கிறார்கள்.

கேரள மாநிலத்தில் எர்ணாகுளம் நூறுசதவிகிதம் படித்தவர்கள் உள்ள இடம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது இந்நாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அதிகமாகஉள்ளதும் கேரளத்தில்தான்.

கேரளா முழுவதும் 100க்கு 100 படித்தவர்கள் உள்ள இடமாக மாற்றுவதற்கே மேற்படி நடவடிக்கை.

## வரிவிளம்பரம்

**G.C.E. O/L கணிதம்**

விரைவில் நடைபெற இருக்கும் O/L 90/91 மற்றும் 9--10 ஆம் ஆண்டுகளுக்கும் கணிதம் தனித்தனியாகவும், சிறு குழுக்களாகவும் அனுபவமிக்க தகைமைபெற்ற ஆசிரியரினால் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: வசந்தம் புத்தகசாலை, 405, ஸ்ரான்லி வீதி (பெற்றோலியம் கூட்டுத்தாபனம் முன்பாக)யாழ்ப்பாணம். (R/1504)

# பதவி வெற்றிடம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
முல்லைத்தீவுக்கிளை.

## நிர்வாக உதவியாளர்/கணக்காளர்

மேற்படி வெற்றிடத்துக்கு தகைமையுள்ளோரிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றன. 15.07.91க்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும். முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

- கௌரவ செயலாளர்

புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(B-2773)

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயக மண்ணில்
01-08-1972

தாயக மீட்பில்
16-06-1990

**கப்டன் பனா**
(த. சசீந்திரன்)
மாங்குள இராணுவ முகாம் மோதலில்
வீரமரணமடைந்தார்

எம் மக்களின் வாழ்க்கை நிலைகண்டு
இரங்கி அவர் வாழ்வின் மறுமலர்ச்சிக்காய்
போராடிக் களத்தில் வீரமரணமடைந்த
புலி வீரன் பனா.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்புத் தந்தை, தாய், அக்காமார்,
அண்ணன்மார், மைத்துனர்.

ஸ்ரேஷன் றோட், கிளிநொச்சி. (R/1495)

# 1ம் ஆண்டு நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



**வீரவேங்கை தினேஷ்**
(யோகநாதன் பிரபாகரன்)

தாயின் மடியில் 27-12-1972 திதி:05-07-91 தமிழீழ மண்ணில் 16-06-1990

வேங்கையது களத்தில் ஏறி வெளிக்கிட்ட வீரன் என்போம்
மாங்குளம் முகாம் தகர்ப்பில் மங்காத புகழும் பெற்றாய்
நீங்காது தான் வந்தபோதும் திசையது மாறமாட்டோம்
நீங்காத நினைவு கொண்டோம் இந்நிலத்தில் தீமானாய்

நாளை இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உயிலங்குளம், பெற்றோர், நண்பர்கள், உறவினர்கள்.
துணுக்காய்.

(R/1505)

# நினைவு கூருகின்றோம்...



**1991 - 07 - 04**

**2ஆம் லெப். ஆனந்தி**

1986 ஆம் ஆண்டு எதிர்பாராத குண்டு வெடிப்பினால் எமைப்பிரிந்த
வினோத் (மாணிக்கம் நவசீலசேகரம் - முதலைக்குழி, சரவெட்டி)

மன்னார் உயிலங்குளத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் காயமுற்று மரணமடைந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப்பெண்

1987 ஆம் ஆண்டு நவிண்டிலில் சிறிலங்காப் படையினரின் நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய
கரண் (செஜனாமூர்த்தி சபந்தன் - வல்வெட்டித்துறை)

கொற்றாவத்தையில் சிறிலங்காப் படையினருடன் இடம்பெற்ற மோதலில் காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
சேரன் (சந்தனம் முத்துக்குமார் - கிளிநொச்சி)

1988 ஆம் ஆண்டு இந்தியப் படையினரின் ''செக்மேட்'' நடவடிக்கையின் போது அளம்பிலில் எறிகணைத் தாக்குதலால் காயமுற்று வீரமரணமெய்திய
2ஆம் லெப். ஆனந்தி (த. காமாட்சியம்மாள் - கணேசபுரம், பரப்புக்கடந்தான்)

மன்னார் நாச்சிக்குடாவில் வீரமரணமெய்திய
2ஆம் லெப். சைமன் (அன்ரன் - தாமரைக்குளம்)

யாழ்ப்பாணத்தில் வீரமரணமெய்திய
காண்டீபன் (மன்னார்)

1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி பன்னங்கண்டி தமிழ்க்கலவன் பாடசாலை மீது இந்தியப் படையினரின் எறிகணை வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட ஆசிரியர்

மாவிட்டபுரத்தில் தேசவிரோதிகளால் அடித்துக் கொல்லப்பட்ட யூனியன் கல்லூரி மாணவன்

1990 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
லெப். கபாலி (அ. நாகராசா - பேசாலை)

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய
லெப். ஜிம்றோ (யாழ்ப்பாணம்)

பலாலியில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமெய்திய
வரதன் (வேலாயுதம் மதியழகன் - 8ஆம் கட்டை, முள்ளியடி, தம்பலகாமம்)

ஆனையிறவில் சிறிலங்காப் படையினரின் மிதிவெடியில் சிக்கி வீரமரணமெய்திய
கந்தசாமி பாலா (கள்ளிப்பிட்டி, கண்டாவளை)

முருங்கனில் தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த
அமல்ராஜ் (அன்ரன் நேசபேட்தம்பி - வேளாங்கண்ணி வீதி, சாவற்காடு, மன்னார்)

மன்னார் தள்ளாடி முகாமில் இருந்து சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலால் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்

கொக்குத் தொடுவாயில் பாடசாலை, தேவாலயம் என்பன மீது சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தியின் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 தமிழ் அகதிகள்

காரைநகரில் சிறிலங்காப் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட தாயும் மகளுமாகிய இரு தமிழ்ப் பெண்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B- 2774)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால்
நடாத்தப்படும் தியாகி திலீபனின்
ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான

# தடகள விளையாட்டு விழா பற்றிய ஒழுங்குவிதிகள்

1. வட்டார மட்டங்களில் சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள விளையாட்டுப் பொறுப்பாளரின் பொறுப்புகளும் கடமைகளும்.

அவ்வட்டாரவையின் பிரதேச செயலகத்தை அலுவலக முகவரியாகக் கொண்டு செயற்படுதல்.

தமிழீழப் பகுதிகளில் விளையாட்டுக்களின் தரம் உயர்த்தலின் பொருட்டும் மக்களின் உடல் நலம் பாதுகாக்கப்படுதலின் பொருட்டும் கிராமங்களின் அடிமட்டத்தில் உள்ள மக்களும் போட்டிகளில் பங்குபற்றும் வகையில் சகல நடவடிக்கையினையும் எடுத்தல்.

இதற்காக ஏற்கனவே உள்ள விளையாட்டுக்கழகங்களை சனசமூகநிலையங்களை நாடலாம்.

வட்டாரவை மட்டத்திலான போட்டிகள் நடாத்தப்படும் போது ஏற்படும் செலவினங்களுக்கு பற்றுச்சீட்டுப் பெற்று வைத்திருந்து மாவட்ட மட்டப் போட்டிகளுக்கு முன்னதாக அவற்றைச் சமர்ப்பித்தல். (போட்டிகளுக்கு வரையறுத்த செலவினம் வழங்கப்படும்.)

போட்டிகளை நடாத்தி முடித்தலின் பொருட்டு வேண்டிய உதவிகளை பிரதேசப் பொறுப்பாளரிடம் பெற்றுக் கொள்ளலாம். போட்டிகளின் போது நடுநிலைமைக்கு வேண்டியவர்களை விளையாட்டுப் பொறுப்பாளர் தனது நம்பிக்கைக்குரியவர்களை சேவைக்கு அழைக்கலாம்.

முதற்கட்டப் போட்டிகள் முடிவடைந்ததும், இதில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெறும் வீர வீராங்கனைகளின் விண்ணப்பப்படிவங்களில் விளையாட்டுப் பொறுப்பாளரின் பகுதி பூர்த்தியாக்கப்பட்டு, அவை மாவட்டப்போட்டிகளுக்காக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

போட்டிகளில் வீர வீராங்கனைகளின் திறமைகள் (நேரம் - நீளம், உயரம் என்பன) செவ்வனே பதிவு செய்யப்பட்டு கோவை ஒன்று தயார் செய்யப்பட்டிருக்க வேண்டும். கொடுக்கப்பட்ட கால இடைவெளிகளை செவ்வனே பயன்படுத்தி போட்டிகளை நடாத்தி, மாவட்டக்குழுவிற்கு ஒத்துழைத்தல்.

★ வட்டாரவை மட்டத்திலான விண்ணப்ப முடிவு திகதி: 10-07-91. வட்டாரவை மட்டத்திற்கு நடாத்தி முடிக்கப்பட வேண்டிய கடைசிநாள் 10-08-1991

★ மாவட்டப் போட்டிகளுக்கு தகுதி பெற்ற விண்ணப்பங்களை ஒப்படைத்தலின் கடைசிநாள் 15-08-1991

★ மாவட்ட மட்டப் போட்டிகள் திலீபனின் உண்ணாவிரதப் போர் தொடங்கிய கால எல்லைக்கு முன்னதாக நடாத்தி முடிக்கப்படும்.

★ மாவட்ட மட்டத்திற்கு மட்டுமென தீர்மானிக்கப்பட்டிருக்கும் போட்டிகளுக்குரிய விண்ணப்பங்களை 31-07-1991 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

2. விளையாட்டுப் பொறுப்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய போட்டி விதிகள்:- வட்டாரவை மட்டப் போட்டிகளில் இருந்து தனிநபர் வெற்றியாளர்கள் நிர்ணயிக்க வேண்டும்.

1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு 5, 3, 1 என புள்ளிகள் வழங்கி அவர்களின் தனித்தனிப் புள்ளிகள் கூட்டப்பட்டு அதிக புள்ளியினை அல்லது புள்ளிகளைப் பெறும் வீரருக்கு "தனிநபர் வெற்றியாளர் கிண்ணம்" வழங்கப்படுதல் வேண்டும். இது ஆண் - பெண்களுக்கு தனித்தனியே அமையும்.

மாவட்ட மட்டப்போட்டிகளின் போது தனிநபர் புள்ளிகள் வட்டாரவைக்கே வழங்கப்படும். இதன் மூலம் விளையாட்டுகளில் சிறந்த வட்டாரவை மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்படும்

ஆண் நிகழ்ச்சிகளில் சிறந்த வட்டாரவை
பெண் நிகழ்ச்சிகளில் சிறந்த வட்டாரவை
மாவட்டத்தில் சிறந்த வட்டாரவை

என்பன நிர்ணயிக்கப்படுவதுடன்

தடநிகழ்ச்சிகளில் சிறந்த ஆண் மெய் வல்லுனர்
களநிகழ்ச்சிகளில் சிறந்த ஆண் மெய் வல்லுனர்
தட நிகழ்ச்சிகளில் சிறந்த பெண் மெய் வல்லுனர்
கள நிகழ்ச்சிகளில் சிறந்த மெய்வல்லுனர் (பெண்)
போட்டிகளில் சிறந்த மெய் வல்லுனர்

போன்ற விருதுகள் போட்டியாளர்களின் திறமையினை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும்.

மாவட்டப் போட்டிகளின் போது ஒவ்வொரு வட்டாரவையும் ஒவ்வொரு அஞ்சல் ஓட்டக்குழுக்களைத் தயார்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். அஞ்சல் ஓட்டம் தனிநபர் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையில் சேராது எனினும் 7, 5, 3 எனப் புள்ளிகளைப் பெறும். ஒருவர் அஞ்சலோட்டம், வேகநடை தவிர்ந்த மூன்று நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளலாம். மாவட்டப் போட்டிகளுக்கு மட்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள சைக்கிள் ஓட்டம், மரதன் ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குபெறும் ஒருவர் வட்டாரவை மட்டப் போட்டிகளிலும் பங்கு கொள்கிறார் எனின் தனித்தனி விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்தல் வேண்டும்.

3. வட்டாரவை மட்டத்தில் போட்டியாளர்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகளும் நிபந்தனைகளும்

வட்டாரவைக்குள் வசிக்கும் நிரந்தர வதிவிடதாரர்கள் அவ்வவ் வட்டாரவையை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்த முடியும். ஒருவர் ஒரு வட்டாரவையை மாத்திரமே பிரதிநிதித்துவப்படுத்த முடியும்.

வெளிமாவட்டத்தவர்கள் எனில் தாங்கள் தற்போது வசித்து வரும் தற்காலிக வதிவிட வட்டாரவையை பிரதிநிதித்துவப் படுத்தல் வேண்டும்.

போராளிகள், தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்தோர், உத்தியோகத்தர்கள், கல்வியின் பொருட்டு நிர்வாக மாவட்டத்தில் வசிப்போர் தாங்கள் விரும்பிய ஏதேனும் ஓர் வட்டாரவையை பிரதிநிதித்துவப்படுத்த வாய்ப்பளிக்கப்படுகிறது. இருப்பினும் ஒரு வட்டாரவையை மட்டும் பிரதிநிதித்துவப் படுத்தலாம்.

வட்டாரவை மட்டப்போட்டிகளிலும் சரி மாவட்ட மட்டப் போட்டிகளிலும் சரி போட்டியாளர்கள் போட்டிக்கு உகந்த உடையணிந்து வருதல் அவசியமாகக் கருதப்படுகிறது. விண்ணப்பப்படிவம் முழுமையாகப் பூர்த்தியாக்கப்படல் வேண்டும்.

4. நடாத்தப்படவுள்ள நிகழ்ச்சிகளின் விபரம்.

வட்டாரவை மட்டத்தில் ஆண்களுக்கானது -

100 மீற்: 200மீற்: 400மீற்: 800மீற்: 1500மீற்: 5000மீற்: 10000மீற்: உயரம் பாய்தல்: நீளம்பாய்தல்: தத்தி மிதித்துப் பாய்தல்: குண்டெறிதல்: தட்டெறிதல்: ஈட்டியெறிதல்: வேகநடை.

வட்டாரவை மட்டத்தில் பெண்களுக்கானது:-

100மீற்: 200மீற்: 400மீற்: 800மீற்: 1500மீற்: 3000மீற்: 10000மீற்: உயரம் பாய்தல்: நீளம்பாய்தல்: தத்திமித்து பாய்தல்: குண்டெறிதல்: தட்டெறிதல்: ஈட்டியெறிதல்: வேகநடை.

மாவட்ட மட்டத்தில் ஆண்களுக்கானது
4x100 மீற். அஞ்சலோட்டம்
4x400 மீற். அஞ்சலோட்டம்
மரதன் ஓட்டம்
சைக்கிள் ஓட்டம்

மாவட்டமட்டத்தில் பெண்களுக்கானது
4x100 மீற். அஞ்சலோட்டம்
4x400 மீற் அஞ்சலோட்டம்
மரதன் ஓட்டம்
சைக்கிள் ஓட்டம்

விளையாட்டுக்களின் பாரம்பரியம் பேணப்பட்டு, எமது பிரதேச விளையாட்டுத்தரம் உயர்த்தப்படுவதோடு மக்களின் உடல்நலம் பேணப்படும் வகையில் போட்டிகளில் பங்கு கொண்டு எமமுடன் ஒத்துழைக்குமாறு கேட்கப்படுகிறீர்கள்.

மாவட்ட விளையாட்டுக்குழு சார்பாக

**இ. இராஜன்**
அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்
யாழ். மாவட்டம்.

24.06.1991

## போட்டிகளின் விபரம்

வட்டாரவை மட்டத்திலானது

| | | |
|---|---|---|
| 100 மீற். : | ஆண் | பெண் |
| 200 மீற். : | ,, | ,, |
| 400 மீற். : | ,, | ,, |
| 800 மீற் : | ,, | ,, |
| 1500 மீற். : | ,, | ,, |
| 3000 மீற். : | பெண் | |
| 5000 மீற். : | ஆண் | |
| 10000 மீற் : | ஆண் | பெண் |
| உயரம் பாய்தல் | ,, | ,, |
| தத்திமிதித்துப் பாய்தல் | ,, | ,, |
| நீளம்பாய்தல் | ,, | ,, |
| குண்டெறிதல் | ,, | ,, |
| தட்டெறிதல் | ,, | ,, |
| ஈட்டி எறிதல் | ,, | ,, |
| வேகநடை | ,, | ,, |

மாவட்ட மட்டத்திலானது

| | | |
|---|---|---|
| 4 x 100 மீற் : | ஆண் | பெண் |
| 4 x 400 மீற் : | ,, | ,, |
| மரதன் ஓட்டம் : | ,, | ,, |
| சைக்கிள் ஓட்டம் : | ,, | ,, |

வட்டாரவை மட்ட போட்டிகளில் வேகநடை தவிர்ந்த 3போட்டிகளில் ஒருவர் பங்குபற்றலாம்,

வட்டாரவை மட்டத்துப் போட்டிகளிலும் மாவட்டத்திற்கு மட்டுமான போட்டிகளிலும் ஒருவர் பங்குபற்ற விரும்பினால் தனித்தனியே விண்ணப்பங்கள் நிரப்பப்பட வேண்டும்.

## வெற்றி தோல்வியின்றி முடிவு

(யாழ் விளையாட்டு நிருபர்)

யாழ். பல்கலைக் கழக அணிக்கும் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற விறுவிறுப்பான சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இரு தரப்பும் தலா ஒரு கோல்களைப் போட்டு சமப் படுத்திக் கொண்டனர்.

ஆரம்பம் முதல் இறுதிவரை ஆட்டம் உச்ச கட்டத்தை அடைந்திருந்தது.

யாழ் பல்கலைக் கழக அணி தனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை பிரயோசனப் படுத்தாமல் வெற்றி பெறும் வாய்ப்பை நழுவ விட்டது.

இப் போட்டிக்கு நடுவராக திரு. அகஸ்ரின் கடமையாற்றினார். (42)

## குண்டுவெடிப்பில் 15 பேர் காயம்

இமாசலப் பிரதேசத்தில் பஞ்சாப் எல்லையை ஒட்டி, பதாம் கோட் அருகேயுள்ள ஜம்தல் நகரத்தில், டில்லி போக்குவரத்துக் கழக பேருந்து ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததில் ஐந்து பயணிகள் இறந்தனர் பதினைந்து பேர் காயமுற்றனர், நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது பேருந்து டில்லியிலிருந்து ஜம்முவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. காயமுற்றோர் அருகிலுள்ள ராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆடி 5 நினைவு தினம்

## மில்லர் என்னும் மாவீரன்

மில்லர் என்னும் மாவீர!
எதிரிப் படைத் தலைவனின்
எக்காளச் சிரிப்பொலி அடங்குமுன்னே.
வெடிமருந்தாலே
அதிரடி கொடுத்த எம்
வேங்கை வீரனே!
கரும்புலியாக-நீ
களம் நோக்கிச் சென்று
மக்களுக்காகவும் உன்
மண்ணுக்காகவும்
மரணத்தை அணைத்தாய்!
இந்த மண்ணின்
ஒவ்வொரு துணிக்கையிலும்
இந்த மக்களின்
ஒவ்வொரு இதயத்திலும் உன்
தியாகத்தாலும் வீரத்தாலும்
நம்பிக்கை விதைகளை
நாட்டினாய்!
உனது வழியில்
உனது பணியில்
இன்னும் எத்தனை எத்தனை
இளைய புலிகள்
எழுந்து நிற்கிறார்!
நீயும் உன் வழி வீரரும்
களங்களில் வளர்த்த
கனவுகள் யாவையும்
காலம் இனிது
காரியமாக்கும்!
தமிழீழம் என்ற எம்
தாயகம் மலரும்!
மில்லரே உனது
மிகப் பெரு வீரம்
மக்கள் மனங்களில்
என்றும் வாழும்!

எழுதியவர்:-
ஆதிலட்சுமி இராசையா,

(நாளை கரும்புலி மில்லரின் நான்காவது நினைவு தினம். இதனை யொட்டி இக் கவிதை வெளியாகிறது.)

## ஒன்றுகூடல்

தெகலிப்பளை கலை, இலக்கியக் கழகத்தினரின் "அரசியல் அனுபவங்கள் செவ்வியும் செயன் முறையும்" என்ற 32ஆவது ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்ச்சிக்கு கலாநிதி நா. சுப்பிரமணியன் தலைமை தாங்க நிகழ்ச்சிகளை கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை நெறிப்படுத்துகிறார். இசை, நாடகக் கலைஞர்கள் வி. என் செல்வராஜா பி. கனகரட்ணம், வீ செல்வரட்ணம் ஆகியோர் பங்கு கொள்கின்றனர். இதன் தொகுப்புரையை சைவப்புலவர் எஸ். செல்லத்துரை வழங்குகிறார்.

## பாலஸ்தீனியருக்கு எதிராக நடவடிக்கை?

(பெய்ரூட்)

லெபனான் முழுவதையும் அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் விதத்தில் ஆயிரக்கணக்கான அரசாங்கப் படைவீரர்களும் நூற்றுக்கணக்கான டாங்கிகளும் தெற்கு லெபனானுக்கு அனுப்பப்பட்டுள்ளன நீதித்துறை அதிகாரத்தை நாடு முழுவதிலும் மீண்டும் ஏற்படுத்தும் இத்திட்டம் சம்பந்தமாக எந்தவித தலையீட்டையும் மேற்கொள்ளப்போவதில்லையென பாலஸ்தீன விடுதலை இயக்கம் கூறியுள்ளது.

ஆனால்விடுதலைஇயக்கத்தினரின் முகாம்களைப் பாதுகாக்க இருப்பதாகவும், இயக்கத்தினரை நிராயுதபாணியாக்கும் நடவடிக்கையை எதிர்க்கப் போவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள வகைசெய்யும் விதத்தில் இராணுவ நடவடிக்கை தாமதப்படுத்தும்படி முஸ்லீம் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் நிராகரித்துள்ளது அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கை பாலஸ்தீன கொரில்லா குழுக்களுடன் மோதலை ஏற்படுத்தும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# மின்சாரம் இன்மையால் வைத்தியசாலையின் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் இரவு வேளைகளில் போதிய மின்சாரம் இல்லாததால் மகப்பேறு விடுதிக்கு நோயாளர்களைக் கொண்டு செல்வதில் பல சிரமங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது என அங்கு பணியாற்றும் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த பல மாதங்களாக மேற்படி வைத்தியசாலையின் நடைபாதைக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் இப்பகுதி இரவு வேளைகளில் இருளில் மூழ்கியுள்ளது இரவில் மகப்பேற்றுக்காக வரும் நோயாளர்களை தள்ளுவண்டியில் வைத்துக் கொண்டு செல்லும் போது மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. சிலர் தவறி வீழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை நோயாளர்களுக்கு உதவியாக வரும் உதவியாளர்களும் தடக்கி வீழ்வதால் அவர்களுக்கும் சிகிச்சை அளிக்கவேண்டிய சூழ்நிலை உருவாகிறது. இது சம்பந்தமாக ஊழியர்கள் பல தடவைகள் வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு முறையிடப்பட்ட போதும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)


## தேவை

"கோடை" நாடகத்தில் நடிப்பதற்கு நடிக, நடிகையர்கள் தேவை. ஆர்வமுள்ள கலைஞர்கள் 07-07-91 ஞாயிறு பி. ப. 2-00 மணிக்கு நேரில் வரவும்.

பட்டப்படிப்புகள் கல்லூரி
57/48 ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம். (B/2776)



தனியார் கல்வி நிறுவன ஒன்றிய

## விசேட பொதுக்கூட்டம்

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

காலம்: 5-7-91 வெள்ளி காலை 9.00மணி

நிகழ்ச்சிநிரல்
- யாப்பை அங்கீகரித்தல்
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- வி. பு. ம. மு. உறுப்பினர்களின் சிறப்புரை

முக்கிய விடயங்கள் அறிவிக்கப்பட இருப்பதனால் வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, மருதனாமடம், தீவகம், காரைநகர் ஆகிய கோட்ட சகல பொதுச் சபை அங்கத்தவர்களையும் வருகை தருமாறு அழைக்கின்றோம்.

பொதுச்செயலாளர்
- யாழ். மாவட்டம்

(R-1506)


# முத்திரையிடல்

(கொழும்புத்துறை)

யாழ் செயலக உள்நாட்டு வர்த்தக பிரிவின் நிறுவை அளவை பகுதியினர் இன்றும் நாளையும் மருதனாமடம் பிரதேச அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் காலை 8-30மணி தொடக்கம் பி. ப. 3-00 மணி வரை இப்பகுதிக்குட்பட்ட நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடவுள்ளனர்.

மேற்படி பிரிவைச் சேர்ந்த வர்த்தகர்கள் அனைவரும் தங்களுடைய நிறுவை அளவை உபகரணங்களுக்கு இக்காலப் பகுதிக்குள் தவறாது முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ் செயலக நிறுவை அளவைப் பகுதிக்கிளைக்களப் பொறுப்பதிகாரி திரு. கே. நாகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

# மேற்பார்வையாளர் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் அனுசரணையுடன் கட்டட நிர்மாண மேற்பார்வையாளர் பயிற்சி நெறி யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

பன்னிரெண்டு மாதகாலப் பயிற்சியைக் கொண்ட இந்த நெறிக்கு இருபத்தைந்து வயதுக்குட்பட்ட க. பொ. த. சாதாரண தரத்தில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி அடைந்தவர்கள் (குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி அடைந்தும் இருக்க வேண்டும்) இவர்கள் எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும் படி யாழ். தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் கே. ஜெயரட்ணம் கேட்டுக் கொள்கிறார். (ஜோ)

# உயிர்த்த மனிதர்களின் கூத்து

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் க. சிதம்பரநாதன் அவர்களின் நெறியாள்கையில் நாடக அரங்கக் கல்லூரி மாணவர்கள் தயாரித்து அளிக்கும் 'உயிர்த்த மனிதர்களின் கூத்து' இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல்

# வவுனியா தடைமுகாமில் பல தமிழ்ப் பெண்கள் கைது

(வவுனியா)

வவுனியா இராணுவ தடைமுகாமில் ஏராளமான தமிழ்ப் பெண்கள், பெண் இராணுவ தொண்டர் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 30 ஆம் திகதி குறிப்பிட்ட பெண்கள் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது தாண்டிக்குளம் சோதனை முகாமில் பெண் பயணிகள் மீதான கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

## பிரிவுக் குழுவுக்கான செயல்பாட்டுக் கருத்தரங்கு

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக் கிளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் குழுவுக்கான செயல்பாட்டுக் கருத்தரங்கு 07-07-91 (முற்பகல் 10.00 மணிக்கு) எமது காரியாலயத்தில் நடைபெறும். பிரிவுக் குழு உறுப்பினர்கள் தவறாது சமுகந்தரவும்.

செயலாளர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (B/ 2772 )



புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார்

## ஆலய வருடாந்த உயர் திருவிழா

05-07-91 வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணி
கொடியேற்றம்

06-07-91 சனிக்கிழமை பி. ப. 5.00 மணி
திருப்பலிப்பூசை - நற்கருணைப் பவனி

07-07-91 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி
திருவிழா - திருப்பலிப் பூசை
நற்கருணைத் திருவிருந்து

காலை 9.00 மணி அருள்மிகு அந்தோனியார்
தேர்ப்பவனி

இந்நற் செய்தியைப் பக்தர்களுக்கு

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி
மண்டபம்

காலம்: 5-7-91 வெள்ளி காலை 9.00மணி

நிகழ்ச்சிநிரல்
- யாப்பை அங்கீகரித்தல்
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- வி. பு. ம. மு. உறுப்பினர்களின் சிறப்புரை

முக்கிய விடயங்கள் அறிவிக்கப்பட இருப்பதனால் வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, மருதனாமடம், தீவகம், காரைநகர் ஆகிய கோட்ட சகல பொதுச் சபை அங்கத்தவர்களையும் வருகை தருமாறு அழைக்கின்றோம்.

பொதுச்செயலாளர்
- யாழ். மாவட்டம்

(R-1506)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## திரு. கதிரேசு கதிர்காமத்தம்பி

பிறப்பு 28-11-1921

இறப்பு 04-06-1991

திதி 04-07-91

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காக திகழ்ந்து எல்லோரையும் நல்வழியில் நடத்திச்சென்று இடை நடுவில் எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்து போனீர்களே உங்களைக் காணாது தாயை இழந்த கன்றுகள்போல் நாம் தவித்து நிற்கின்றோம். தாங்கள் எம்மீது வைத்திருந்த பாசத்தையும், நேசத்தையும் என்றென்றும் மறவோம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

ஒலிமடு,
மாங்குளம்.

(R/1501)

---

முன்னர் விண்ணப்பிக்கும் படி யாழ். தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் கே. ஜெயரட்ணம் கேட்டுக் கொள்கிறார்.

(லோ)

## உயிர்த்த மனிதர்களின் கூத்து

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் க. சிதம்பரநாதன் அவர்களின் நெறியாள்கையில் நாடக அரங்கக் கல்லூரி மாணவர்கள் தயாரித்து அளிக்கும் 'உயிர்த்த மனிதர்களின் கூத்து' இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல் 4.00 மணிக்கு அரங்கேறவுள்ளது இதற்கான நுழைவுச் சீட்டுக்களை அரங்க வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.

## ஆண்டு விழா கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்க ஆண்டு விழாக்கூட்டம் நடந்த வெள்ளிக்கிழமை புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் வி.ஜெ பாலசிங்கம் மங்கல விளக்கேற்றி மேற்படி சங்க ஆண்டு விழாவை ஆரம்பித்து தலைமை தாங்கி உரை நிகழ்த்தினார். (21)

## வானொலி நாடக எழுத்துப் பிரதி போட்டி

யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க தொடர்பு சாதன ஆணைக்குழுவினர் வானொலி நாடக எழுத்துப்பிரதிப் போட்டியொன்றினையும் ஒழுங்கு செய்து பிரதிகளைக் கோரியுள்ளனர்.

தெரிவு செய்யப்படும் பிரதிகளுக்கு சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன் நாடகங்களை ஒலிப்பதிவு செய்துவெளியிடவும் தீர்மானித்துள்ளனர்

கத்தோலிக்க விழுமியங்களை உள்ளடக்கியதாக எழுதப்படும் பிரதிகள் 10-8-91 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் (21)

---

## ஆலய வருடாந்த உயர் திருவிழா

05-07-91 வெள்ளிக்கிழமை பி. ப. 4.30 மணி
கொடியேற்றம்

06-07-91 சனிக்கிழமை பி. ப. 5.00 மணி
திருப்பலிப்பூசை – நற்கருணைப் பவனி

07-07-91 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி
திருவிழா - திருப்பலிப் பூசை
நற்கருணைத் திருவிருந்து

காலை 9.00 மணி அருள்மிகு அந்தோனியார்
தேர்ப்பவனி

இந்நற் செய்தியைப் பக்தர்களுக்கு
மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

– பங்குத்தந்தையும்
நிர்வாகக்குழுவும்

(R/1484)

---

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

# கிளைக்குழுத் தேர்தல்

கிளை இல. 12 - நல்லூர் மத்தி
22 - கொழும்புத்துறை மத்தி
35 - சின்னக்கடை

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி - 06 07 91
" " " இடம் - அவ்வக் கிளை நிலையங்கள்
" " " நேரம் - காலை 9 00 - 10 00 வரை
ஆட்சேபனைகள் ஏற்றுக் கொள்ளல் - காலை 10 00 - 11 00 வரை

போட்டி ஏற்படின் தேர்தல் நடைபெறும் திகதி-13 07 91
வாக்களிக்கும் நேரம் - காலை 9.00 - மாலை 4.00 வரை

மேலதிக விபரங்களை சம்பந்தப்பட்ட கிளை நிலையங்களில் பெற்றுக் கொள்ளும்படி அங்கத்தவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1991.07.02

செ. கனகசபாபதி
தேர்தல் உத்தியோகத்தர்

(B-2771)

### சிந்தனைக்கு

ஒரு மனிதனின் இயல்பை அறிய வேண்டுமானால் அவனிடம் அதிகாரத்தைக் கொடுத்துப் பார்.
— யுகோஸ்லாவியப் பழமொழி


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 04.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## நியாயம் கற்பிக்கும் அரச அதிகாரி

வடக்கு-கிழக்குத் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக்குவதான நியமனங்கள் யாவும் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளன. இதன் மூலம் வடக்கு கிழக்கில் 500 தொண்டர் ஆசிரியர்கள் தமது நிரந்தர நியமனங்களை இழக்கின்றார்கள்.

வடக்கு கிழக்கில் இன்றைய சூழ்நிலையில் பாடசாலைகளில் மாணவர் தொகை குறைவு ஆசிரியர் தொகை கூடுதலாக உள்ளது. எனவே தொண்டர் ஆசிரியர்கள் நியமனங்கள் உடன் அவசியமில்லை என கல்விச் சேவை ஆணைக்குழு இதற்கு நியாயம் கற்பித்துள்ளது.

ஆனால் உண்மை நிலையும் அரசாங்கத்தின் நோக்கமும் அதுவல்ல. வடக்கு கிழக்கின் மீது தீவிர பொருளாதாரத்தடை நடவடிக்கையை மேற்கொண்டுள்ள சிறிலங்கா அரசாங்கத்தின் தமிழர் மீதான ஒதுக்கு முறையின் ஒருவடிவமே இந்த நியமனங்கள் ரத்தாகும். இந்த ரத்தின மூலம் ஐந்நூறு பேரின் வேலைவாய்ப்பு பறிக்கப்படுகின்றது. ஐந்நூறு குடும்பங்களின் வருமானம் தடைப்படுகின்றது. அத்தோடு சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஒரு பகுதி நிதி மிச்சப்படுகின்றது. பாதுகாப்புச் செலவிற்குப் பயன்படுகின்றது.

இதைப் போன்றதொரு விளக்கத்தையே ஜனசக்தி தொடர்பாகவும் சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கில் பிரச்சனை தீர்ந்ததும் அங்கு ஜனசக்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என கம்புறுபிட்டியவில் நடந்த சமுர்த்தி கொண்டாட்டங்களின் போது அறிவித்தார்.

அதேவேளை, இலங்கை பூராகவும் 1,58,000 பேருக்கு வழங்கப்பட்டு வந்த உணவு முத்திரைகள் செப்டம்பர் மாதத்துடன் நிறுத்தப்படுகின்றன. இதற்குக் காரணம் இவர்களுக்கு ஜனசக்தி உதவி வழங்கப்பட்டமையே என சிறிலங்கா ஜனாதிபதி தெரிவிக்கின்றார். இந்த 1,58,000 பேரில் வடக்கிலும் கிழக்கிலும் உணவு முத்திரை வழங்கப்பட்டோரும் உள்ளடங்குகின்றனர். இந்தநிலையில் இவர்களுக்கு ஜனசக்தியும் இல்லை, உணவு முத்திரையும் இல்லை. சிறிலங்கா அரசாங்கம் இனப்படுகொலையை நிறுத்தி நடந்திருக்குமானால் ஜனசக்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வரை வடக்கு கிழக்கில் உணவு முத்திரைத் திட்டத்தை அமுலில் வைத்திருத்தல் வேண்டும். ஆனால் சிறிலங்கா அரசாங்கம் அவ்வாறு செய்யவில்லை.

சிறிலங்கா அரசாங்கம் தமிழருக்குரிய உரிமை மறுப்பதற்கும், புறக்கணிப்பதற்கும் தான் விரும்பிய காரணம் ஒன்றைக் கூறலாம். இனவாத நோக்குக் கொண்ட அரசாங்கத்தின் செயற்பாட்டைக் கண்டு தமிழ் மக்களும் பெரிதாக அலட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் சிறிலங்கா அரசாங்கங்களின் காரணங்களை எமது தமிழ் அதிகாரிகளும் வலியுறுத்துவதுதான் விந்தையாகவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்களை ரத்துச் செய்வது பற்றிக் குறிப்பிட்ட யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் இராணுவ நடவடிக்கை இடம் பெற்ற இடங்களில் உள்ள பாடசாலைகள் வேறு இடங்களிலுள்ள பாடசாலைகளில் இயங்குகின்றன. அங்கே மாணவர்கள் எண்ணிக்கை மிகமிக் குறைவு. அங்கே கற்பித்துக் கொண்டிருக்கும் நிரந்தர ஆசிரியர்களின் எண்ணிக்கையோ கூடுதலாகவுள்ளது. எவ்வாறு தொண்டர் ஆசிரியர்களுக்குரிய நியமனங்கள் வழங்க முடியும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார். அதாவது சிறிலங்கா அரசாங்கத்தின் முடிவை நியாயப்படுத்துகின்றார்.

அதேவேளை, கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டது போன்று இடம் பெயர்ந்த பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவுதான். இங்கு இடம் பெயர்ந்த மாணவர்கள் ஒரே இடத்தில் குடியேறாமையே காரணம். இதற்கு அவர்களைக் குறை கூறமுடியாது.

ஆனால், இடம் பெயர்ந்த மாணவர்களில் ஒரு சிறு வீதத்தினரைத் தவிர அனைவரும் குடாநாட்டிற்குள்ளேயே வாழ்கின்றனர். இவர்கள் யாவரும் தமது வசதிக்கும், பாதுகாப்பிற்கும் ஏற்புடையதெனக் கருதும் ஏதோ ஒரு பாடசாலையில் அனுமதி பெற்றுள்ளனர். இதேபோன்று ஆசிரியர்களும் இடம்மாறியுள்ளனர்.

எனவே மாணவர்கள் அதிகரித்த பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்யாமல் வரவு குறைந்த இடம் பெயர்ந்த பாடசாலைகளின் ஆசிரியர்கள் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ளனர் என ஒரு கணக்குக் காட்டுவது சரியான வழிமுறையல்ல.

மேலும் பாதுகாப்பான பகுதிகளில் இருந்தும் பெருமளவு ஆசிரியர்கள் குடாநாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். பலர் சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறியுள்ளனர். இந்நிலையில் அவர்களின் இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கும் போது சிறிலங்கா அரசாங்கத்தின் நொண்டிச்சாட்டை ஒரு கல்வி அதிகாரி கிளிப்பிள்ளை போல் கூறுவது எந்தளவிற்குப் பொருத்தப்பாடு உடையது?

அரச அதிகாரிகள் என்பதினால் அரசாங்கம் சொல்வதை மக்களிடம் தெரிவிப்பது மட்டும் தான் அவர்களின் கடமை அல்ல. மக்களின் குறைகளையும் நெருக்கடிகளையும் அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்வதும் அதிகாரிகளின் கடமை தான். ஏனோ பல தமிழ் அதிகாரிகள் இதை மறந்து விடுகின்றார்கள்.

கடிவாளத்துடன் விசாரணை தொடங்கியதால்

# உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிக்கவே முடியாது

## ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி லட்சுமிநாராயணன்

(சென்னை)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக விசாரணையைத் துவங்குப்போதே புலிகள் தான் என்கிற கடிவாளத்தோடு வழக்கை விசாரிக்க ஆரம்பித்தால் உண்மைக் குற்றவாளிகளைக்கண்டு பிடிக்கவே முடியாது.

இவ்வாறு ஓய்வுபெற்ற உயர் பொலிஸ் அதிகாரி வி. ஆர். லட்சுமி நாராயணன் (முன்னாள் டி ஜி. பி.) தற்போது ராஜீவின் கொலையை விசாரணை செய்துவரும் விசேஷ விசாரணைக்குழு மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

பதினேழு வருடங்கள் சி. பி. ஐயில் பணியாற்றிய அனுபவம் கொண்ட வி. ஆர். லட்சுமி நாராயணனை 'ஜூனியர் விகடன்' நிருபர் சந்தித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொலையைச் செய்தது புலிகள் தான் என்பதை உறுதிப்படுத்த இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணாவைக் கொலைப் பயன்படுத்தப்பட்ட குண்டும், ராஜீவைக் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட குண்டும் ஒரே ரகத்தைச் சேர்ந்தது என்கிறார்கள். ரஞ்சன் விஜயரட்ணாவைக் கொன்றது புலிகள் தான் என்று இன்னும் இலங்கை அரசே உறுதிப்படுத்தவில்லையே? சிங்கள தீவிரவாதக் குழுவான ஜே. வி. பி கூட விஜயரட்னாவைக் கொன்றிருக்க வாய்ப்புண்டு என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவொரு வழக்கிலும் முதலில் உள்ளூர் தீவிர விசாரணை நடத்தவேண்டும். அதை விட்டு அதிரடி நடவடிக்கையாக விசாரணைக் குழுவொன்றும் செல்ல வேண்டிய அவசியம் என்ன? அங்கு போய் என்ன பலன்? இலங்கை அரசு எல்லா உதவிகளையும் செய்வதாக உறுதியளித்ததை மிகுந்த நன்றி உணர்ச்சியோடு பகடுக்க வேண்டியது தவறு.

அவர் மேலும் குறிப்பிடும் போது நம் அரசியல் தலைவர்களுக்கு உள்ளூரில் எதிரிகளே இல்லையா? நம் தலைவர்களுக்கு அவர்கள் கட்சியிலேயே கூட எதிரிகள் இல்லையா?

இதற்கிடையில் அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற பேச்சுக்கள் காங்கிரஸ்காரர்கள் உண்மையிலேயே ராஜீவ் காந்திக்கு அஞ்சலி செலுத்த நினைத்தால் கொலையாளிகள் யார் என்பது பற்றி வாய்க்கு வந்தபடி பேசக் கூடாது இது போன்ற பேச்சுக்கள் தேர்தல் வெற்றி என்கிற ஆதாயத்தை மட்டுமே பெற்றுத் தரும் ஆனால் விசாரணைக்கு பெரும் தடையாகவே இருக்கும். மற்றவர்கள் பேசுவதை விட மத்திய உள்துறை அமைச்சராக இருந்தவர் சிறந்த வழக்கறிஞரான சிதம்பரம் பேசுவது எனக்கு பெரும் வியப்பையே தருகிறது.

இவர்கள் தான் கொலையாளிகள் என்று வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டிருப்பது விசாரணையின் முடிவு இப்படித் தான் இருக்க வேண்டும் என்று விசாரணைக் குழுவை கட்டாயப்படுத்துவது போலத்தான் எடுத்துக் கொள்ளமுடியும் என்றார்.

(நி)

# மாணவர்கள் சுயமாக கற்கும் ஆற்றலை இழந்துள்ளார்கள்

- பேராசிரியர் நவரத்தினராசா

(யாழ்ப்பாணம்)

கடந்த சில வருடங்களாக எமது சிறார்கள் இணைப்பாடச் செயலான விளையாட்டுப்போன்றவற்றில் பங்கு கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் தனியார் கல்வி நிறுவனங்களில் ஓய்வு நேரங்களைப் போக்கும் நிலை உருவாகியது. இதனால் ஒரு பக்கச் சார்புடைய வளர்ச்சியே மாணவர்களிடம் காணப்படுகிறது.

மேற்படிப்புப் படிக்கும் மாணவர்களும் சுயமாகக் கற்கும் ஆற்றலை இழந்து விடுகிறார்கள் என யாழ். மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொதுப் பொறியியல் துறைப் பேராசிரியர் வி. நவரத்தினராசா தெரிவித்தார்.

மூலைசாலிகள் வெளியேறிக் கொண்டிருக்கும் சமயத்தில், கலாநிதி நவரத்தினராசா வெளிநாட்டில் வகித்து வந்த உயர் பதவியைத் துறந்து, பல்கலைக்கழகத்தில் பொதுப் பொறியியற்துறையை பொறுப்பேற்று நடத்துவது வரவேற்கத் தக்க முன் மாதிரியாகும் என்றார் கல்லூரி அதிபர் என். சண்முகநாத பிள்ளை.

மேற்படி போட்டிக்குத் தலைமை வகித்த யாழ் மத்திய கல்லூரி அதிபர் என். சண்முகநாத பிள்ளை தொடர்ந்து பேசுகையில்:-

சுடுகாட்டையும், இடுகாட்டையும் பண்படுத்துவது எமது மரபாகும் இந்த வழியில் எமது மைதானத்தைப் புரணமைத்து தமிழீழக் கொடியையும், கல்லூரிக் கொடியையும் உயர ஏற்ற ஐந்து ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு விளையாட்டுப் போட்டியை மீண்டும் ஆரம்பித்துள்ளோம். இந்தக் கொடிகளின் கீழ் அணி திரள்கின்ற எங்கள் இளம் சமுதாயம் என்றும் கொடிகளைத் தாழ்வுறச் செய்யாத வலிமை மிக்கவர்களாக இந்த மண்ணின் மைந்தனும், கல்லூரியின் முன்னாள் மாணவனுமான நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் 1954 ஆம் ஆண்டு மணிலாவில் இடம்பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் தனியாகப் பங்கு பற்றி, உயரம் பாய்தலில் சாதனையை உருவாக்கி எமது பெருமையை உலகறியச் செய்தவர் இவர் இந்தமண்ணுக்குத் தேடித்தந்த பெருமையை எமது இளைஞர் முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்றார்.

## திட்டமிட்டபடி பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா திட்டமிட்டபடி 1991 ஜூலை 6 ஆம் திகதி சனிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

முற்பகல் 9 30 மணிக்கு ஆரம்பமாகும் பட்டமளிப்பு விழா முற்பகல் 11 30 மணியளவில் முடிவுபெறும்.

## ஜேர்மன் ஏரியில் மூழ்கி 3 யாழ். இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மேற்கு ஜேர்மனியில் ஏரியில் குளிக்கச் சென்ற யாழ் இளைஞர்கள் மூவர் நீரில் மூழ்கி மரணமானார்கள்.

பல ஆண்டுகளாக மேற்கு ஜேர்மனியில் தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் செய்து வரும் மாதகலைச் சேர்ந்த வீரசிங்கம் பேரின்பநாதன் (வயது 39) என்பவரும் அவரது இரு நண்பர்களும் அங்குள்ள ஏரி ஒன்றில் குளித்துக் கொண்டிருக்கும் போது நீரில் மூழ்கி மரணமானார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது சம்பவம் நடைபெற்று இரண்டு வாரங்களாகியும் இவர்களது சடலங்கள் இதுவரை மீட்கப்படவில்லை என அவர்களது உறவினர்களுக்குத் தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

(ச)

## தாண்டிக்குள பாடசாலையில் உளவாளிகள் முகாம்

(வவுனியா)

வவுனியா தாண்டிக் குளம் அரசினர் பாடசாலையில் சிறிலங்கா இராணுவ உளவாளிகளின் அலுவலகம் செயல்பட்டு வருவது தெரிந்ததே.

வவுனியா நகருக்கான போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகளில் பலரை தினமும் கைது செய்யும் இராணுவத்தினர் மேற்படி அலுவலகத்திடம் ஒப்படைக்கின்றனர் என்றும் இதன் காரணமாக பயணிகள் தயக்கமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தவிர, சிறிலங்கா அரசினால் தமிழ்ப்பகுதிக்கென தடை செய்யப்பட்ட பொருள்கள் கொண்டுவந்து இராணுவத்தால் கைதுசெய்யப்படுபவர்கள் இராணுவ உளவாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டு, விசாரணை செய்யப்படுகின்றனர்.

கைது செய்யப்படுபவர்களில் பலருக்கு இராணுவம் இலஞ்சங்கள் அளிப்பதாகக் கூறி அவர்களிடம் வடபகுதி நிலைமை பற்றி தகவல் திரட்டுவதற்கு முனைவதாகவும் தெரியவருகிறது.

(நி)

## விளையாட்டுப் போட்டி

(நல்லூர்)

நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தினரின் சிறுவர் பாடசாலையின் இவ்வாண்டுக்கான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மேற்படி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# யாழ். கல்வித் திணைக்கள இரு ஊழியர் இடைநிறுத்தம்

(நல்லூர்)

யாழ். கல்வித் திணைக்கள ஊழியர்களிருவர் கடமையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் கல்வித் திணைக்கள ஊழியர்கள் இருவர் இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதியில் இருந்து செயற்படும்படியாக வவுனியா கல்வித் திணைக்களத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். எனினும் இவர்கள் செய்த முறைப்பாட்டிற்கு இணங்க 30-4-91 வரை யாழ் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இரு ஊழியர்களும் மேற்படி காலக்கெடுவுக்குப் பின்னரும் வவுனியா கல்வித் திணைக்களத்துக்குச் சென்று கடமையைப் பொறுப்பேற்காததால் வவுனியா கல்வித் திணைக்களம் இவர்களைக் கடமைக்கு வருமாறு கோரியது. இக்கோரிக்கையை அலட்சியம் செய்து இவர்கள் கடமைக்குச் செல்லாத காரணத்தால் வவுனியா கல்வித் திணைக்களம் இது பற்றி வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அறிவித்தது. இதன் காரணமாக யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த மேற்கூறிய இருவருக்கும் வட கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளரினால் சேவையிலிருந்து இடைநிறுத்தும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, தெல்லிப்பளை உடுவில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களின் பிரதிநிதிகளை தமது குறைபாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டமொன்றை கொக்குவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக காரியாலயத்தில் ஏற்பாடு செய்துள்ளனர். மேற்படி கூட்டத்தில் சகல முகாம்களிலும் இருந்து 2 பிரதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டுமெனக் கோரப்படுகிறது. மேற்படி கூட்டம் 05-07-91 (நாளை) காலை 9 மணிக்கு நடைபெறும்.

## இசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இசைமணி செல்வி சாரதா சச்சிதானந்தம் அவர்களின் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது.

## தேவாலயத்தை தகர்க்க முயன்ற

# கர்ப்பிணிப் பெண் உட்பட ஐவர் பொலிஸாரால் கைது

(அவிசாவெலை)

தெரணியாகலை சமன் தேவாலயத்தை குண்டு வைத்துத் தகர்க்க முயற்சித்த ஐந்து பேரைக் கடந்த வியாழன் இரவு பொலிஸார் பிடித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றைத் தொடர்ந்தே பொலிசார் இவர்களை மடக்கிப் பிடித்தனர்.

சந்தேக நபர்கள் அவிசாவெலை நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டு தலா ரூபா 50,000 ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஐந்தாவது சந்தேக நபரான கர்ப்பிணி ரூபா 5,000 பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

# யாழ். வைத்தியசாலைக்கு கொழும்புச் சீமெந்து

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா முப்படைகளினதும் தாக்குதலுக்குட்பட்ட யாழ். போதனா மருத்துவ மனையின் எஞ்சிய திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு கொழும்பில் இருந்து கப்பல் மூலம் சீமெந்து எடுத்து வரப்படவிருக்கின்றது.

இம் மருத்துவ மனையின் மருந்துக் களஞ்சியம் மற்றும் வைத்தியர் விடுதி போன்றவையும் வேறும் சில கட்டடங்களும் திருத்தி அமைக்கப்படாத நிலையிலேயே இருக்கின்றது. இவற்றைத் திருத்தி அமைப்பதற்குரிய மதிப்பீட்டு அறிக்கை சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திருத்த வேலைக்கான பணமும், சீமெந்தும் கொழும்பில் இருந்து கிடைத்ததுடன் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று இம் மருத்துவமனையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நயின தீவிலிருந்து

# வெளியூரைசேர்ந்தவர்களை வெளியேற உத்தரவு

(புங்குடுதீவு)

நயினாதீவில் உள்ள சிறிலங்கா கடற்படையினர் அப்பகுதியில் தங்கிநிற்கும் வெளியூர்களைச் சேர்ந்த அனைவரையும் உடனடியாக வெளியேறுமாறு அறிவித்தல் விடுத்துள்ளார்கள். நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவத்தை யொட்டி உறவினர் வீடுகளில் தங்கிநிற்கும் இத்தகையோரை உடனே வெளியேறிவிடுமாறு மேற்படி ஆலய தீர்த்தத் திருவிழாவாகிய சென்ற மாதம் 27 ஆம் திகதி இவ்வறிவித்தலை படையினர் அறிவித்துள்ளனர். மேலும் அம்பாள் ஆலய திருவிழா தவிர்ந்த ஏனைய சொந்தவிடயங்களுக்காக அங்கு தங்கி நிற்போரை அன்றைய தினம் பிரஸ்தாப ஆலயத்திற்கு வருமாறும் படையினர் உத்தரவு பிறப்பித்தனர். இதனையடுத்து சம்பந்தப்பட்ட அனைவரும் படையினரின் உத்தரவுப்படி அம்பாள் ஆலயத்தில் ஒருநாள் முழுவதும் காத்து கிடந்த போதிலும் படையினர் வந்து எதுவித விசாரணையையும் மேற்கொள்ளாததனால் வீடு திரும்பினர்.

இத்தகைய நடவடிக்கைகளினால் வெளியூர்களில் இருந்து செல்லும் உறவினர்களைத் தமது வீடுகளில் தங்கவைக்க நயினாதீவு மக்கள் பெரிதும் அஞ்சுகின்றனர். (22)

# வெற்றிடங்கள் பற்றிய தகவல் திரட்டப்படுகிறது

(நல்லூர்)

யாழ். பிரதேசத்திலுள்ள கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு இருக்கும் பாடசாலைகளில் உள்ள சிற்றூழியர், எழுதுவினைஞர் வெற்றிடங்கள் பற்றிய விபரங்கள் திரட்டப்படுகின்றன.

தொழிலாளி சுகாதாரத் தொழிலாளி, காவலாளி, ஆய்வுகூட அலுவலர், வே.கே.எஸ். சமையற்காரர் தோட்டத் தொழிலாளி, எழுதுவினைஞர் ஆகியோருக்கான வெற்றிடங்கள் விபரங்களே திரட்டப்படுகின்றன.

மேற்படி பதவிகளை வகித்து இளைப்பாறி அல்லது மாற்றலாகிச் சென்றிருந்தால், அதனால் அப்பதவிகளுக்கு உள்ள வெற்றிடங்களின் விபரங்களைப் பாடசாலை ரீதியாக உடனடியாகத் தரும்படி யாழ். கல்விப் பணிப்பாளர் சகல கோட்டக் கல்வி அதிகாரிகளையும் கடித மூலம் கேட்டிருந்தார்.

இந்த வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# இந்திய நாணய பெறுமதி மீண்டும் இறக்கம்

(டில்லி)

இந்திய ரூபாவின் நாணய மாற்று வீதத்தை இந்திய ரிசேர்வ் வங்கி மீண்டும் குறைத்திருக்கிறது. நாளை வெள்ளிக்கிழமை முதல் பிரதான அந்நிய செலவாணிகளுக்கு (நாணயம்) எதிராக ரூபாவின் மதிப்பு 15 சதவிகிதம் குறைந்து விட்டது.

இன்றைய இந்திய ரூபாவின் மதிப்பு இறக்கம் 10.6 முதல் 11.1 விகிதமாகும். கடந்த திங்கட்கிழமை இதேபோன்ற இறக்கம் 8.5 முதல் 9.7 சதவிகிதம்வரை இருந்தது.

இப்போது ஒரு டாலரின் விலை ரூபா 25.88 பைசாவாக இருக்கும் முந்திய விலை ரூபா 21.1 பைசாவாகும்.

அதாவது இந்திய ரூபாவின் மதிப்பு 18.8 சதவிகிதம் வீழ்ச்சியடைந்திருக்கிறது.

# அநாதரவான நிலையில் 4 மாத ஆண் குழந்தை

(பருத்தித்துறை)

சனசமூக நிலைய கட்டடமொன்றினுள் அநாதரவாக விடப்பட்டிருந்த 4 மாத அழகிய ஆண் குழந்தையை சனசமூக நிலைய நிர்வாகிகள் கண்டெடுத்து வடமராட்சி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

மந்திகையில் உள்ள கம்பன் சனசமூக நிலைய மண்டபத்திலேயே இவ் அழகிய ஆண் குழந்தை அநாதரவாக விடப்பட்டிருந்தது. இக் குழந்தையின் தாய் யார் என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அநாதரவாகக் கண்டெடுக்கப்பட்ட இவ் அழகிய ஆண் குழந்தையை வடமராட்சி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நீதி, நிர்வாகப் பொறுப்பாளர், இக் குழந்தையைப் பராமரிப்பதற்காக ஒரு குடும்பத்திடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## யாழ் சர்வோதயத்தில்

கப்படுகிறது. இருப்பைக் கணக்கெடுத்த போதே மேற்படி கையாடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

சர்வோதயமும் சிறிலங்கா அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மனித நேய ஸ்தாபனமாகும். அந்நிய நாடுகளில் இருந்து சர்வோதய அபிமானிகள் வழங்கும் அன்பளிப்பைக் கொண்டே மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சர்வோதயத்தால் கொள்வனவு செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்காவிற்கான

கள், கலை, கலாசாரப் பரிவர்த்தனைகள் உட்பட சகல நல்லெண்ண விஜயங்களும் ரத்துச் செய்யப்படவுள்ளன.

தூதுவர் கிளாரிரோன் வெளியேற்றப்பட்டது சம்பந்தமாக பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர், சிறிலங்கா அதிபர் பிரேமதாசவிற்கு, இவ் வெளியேற்ற உத்தரவு ஒருதலைப்பட்சமானதும், அர்த்தமற்றதும் என்றும், உள்நாட்டு அரசியலில் அவரின் தலையீடு என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும், வெளிப்படையாக தெரிவித்தார்.

ஆயினும் லண்டனிலுள்ள சிறிலங்கா தூதுவரை திருப்பி அழைக்கும்படி தாம் கோரப் போவதில்லை எனவும் தெரிவித்தார். கூடிய விரைவில் பிரிட்டனின் தூதுவர் சிறிலங்காவில் நியமிக்கப்பட வேண்டும் என பிரிட்டன் விரும்புகிறது. ஏனெனில், சிறிலங்காவின் மனித உரிமைகள் பற்றி குரல் தரவல்ல மைய நிலையில் பிரிட்டன் இருப்பதனாலேயே எனலாம் என்றார்.

## ஊழியர்

கொடுப்பனவுகள் கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளது.

இக்காலத்துக்குரிய விசேடப்படி உயர்ச்சி இவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனவும், இப்படி வழங்கலாமா இல்லையா என்பது பற்றிப் பொதுநிர்வாக அமைச்சிடம் விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாவீரர்

க்கான ஆக்கங்களை எழுத்தாளர்கள், கலைஞர்கள், மாணவர்கள், மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் வெவ்வேறு பிரிவுகளாக இப்போட்டிகள் நடைபெறும்.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் 25-10-1991 இற்கு முன்னதாக தமது ஆக்கங்களை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரதேசக் காரியாலயத்தில் அல்லது பத்திரிகைக் காரியாலயங்களில் ஒப்படைக்கலாம். இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு தமிழீழத்தின் அதியுயர் கௌரவம் மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.


## மரண அறிவித்தல்

### புளோறன்ஸ் அருந்தவமலர்

சுன்னாகம் சூராவத்தைப் பகுதியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் லோறன்ஸ் அரியநாயகத்தின் அன்பு மனைவி புளோறன்ஸ் அருந்தவமலர் காலமாகிவிட்டார். அன்னார் அன்ரன் (பிரான்ஸ்), அமலா, பாலன், பேசல் (ஜேர்மனி) (பிரான்ஸ்), சாந்தா (கொழும்பு) வசந்தா, மரியா, இதயா ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார். இறுதிச் சடங்குகள் இன்று (04-07-91) காலை 10 மணிக்கு நடைபெறும்.

தகவல்: லோறன்ஸ் அரியநாயகம்.

(B/2778)


## அகதிகள்

5,000 குறைவான இலங்கைத் தமிழர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டுள்ளார்கள் என்று செல்வி ஜெயலலிதா நேற்றுச் சென்னையில் செய்தியாளரிடம் கூறினார்.

முகாம்களுக்கு வெளியில் சுமார் 50 000 மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் வசித்து வருகிறார்கள் என்று தமிழ்நாடு அரசு மதிப்பிட்டுள்ளது. இதேவேளை பொலிஸ் நிலையங்களில் குறிப்பிட்ட திகதியின் முன் பதிவு செய்து கொள்ளாத இலங்கைத் தமிழ்மக்கள் மீது நாட்டை விட்டு வெளியேற்றுவது உட்படக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு பணிப்புரை கூறுகிறது

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ்நாடு மாநில அரசு, மத்திய அரசு ஆகிய இரண்டுமே அக்கறை கொண்டுள்ளதாகச் செல்வி ஜெயலலிதா மேலும் குறிப்பிட்டார்.

## கறுப்பு

கறுப்புத்துணி ஒன்றைத் தமது தேவைக்காக வாங்கிவந்த ஒருவர் இராணுவத்தால் தாக்கப்பட்டார். (தி)

## மன்னார்

இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதில் மேலும் பல படையினர் கொல்லப்பட்டும், படுகாயமுற்றும் உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நூறு நாள்

வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் முக்கிய விடயம் பேச்சுவார்த்தை புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் நேரடியாக நடைபெறும் என்பதுதான்.

அதே வேளை இத்திட்டத்தில் புலிகள், வன்முறையைக் கைவிடுவோம் எனப் பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளதாம். இவ் உத்தேச திட்டம் 1987 இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்களைவிட சற்று அதிகமான அதிகாரங்களைத் தமிழர்களுக்கு வழங்குகின்றதாம்,

மேலும், இத்திட்டத்தை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா வரவேற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.